# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.

(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590


<u>ஆணை நாள் 01.07.2026</u>

<u>முன்னிலை</u>

**திரு.அ.விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

*****

## <u>வழக்கு எண். SA 6675/B/2024</u>

| | | |
|---|---|---|
| முனைவர்.சோ.செல்வம் | | மேல்முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| பொதுத் தகவல் அலுவலர் /<br>நிர்வாக அலுவலர்,<br>மண்டலம் - 4 (தெற்கு),<br>மதுரை மாநகராட்சி,<br>மதுரை மாவட்டம் - 625009. | | பொது அதிகார அமைப்பு |

**<u>கோரிய தகவல்:</u>** மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 12.02.2024 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில், அரசு அனுமதியின்றி கடலை மிட்டாய் கம்பெனி மற்றும் இரும்பு பட்டறை நடத்துவது குறித்து தான் அளித்த 24.01.2024 தேதியிட்ட புகார் மனு தொடர்பான தகவல்கள் வழங்க கோரி மொத்தம் 3 இனங்களில் மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் சரியான தகவல்கள் வழங்கப்படவில்லை என தெரிவித்து, மேல்முறையீட்டாளரால் 18.05.2024 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (01.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | முனைவர்.சோ.செல்வம் அவர்கள் இன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை. (தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது). |
| பொதுத் தகவல் அலுவலர் | பொதுத் தகவல் அலுவலர் திரு.சு.சிவகுமார், நிர்வாக அலுவலர், மண்டலம் - 4, மதுரை நகராட்சி, மதுரை மாவட்டம் அவர்கள் ஆஜரானார். |

**ஆணை**

1. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு கடித எண். ம4இ1/000675/2024 நாள்.13.03.2024, கடித எண். ம4C1/000676/2024 நாள்.30.05.2024 வாயிலாக தகவல்கள் வழங்கியுள்ளதாக தெரிவித்து, அதற்குண்டான ஆவண நகல்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

2. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகாத நிலையில், 27.06.2026 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பிய கடிதத்தின் வாயிலாக, மேல்முறையீட்டாளர் தனது வயது முதிர்வின் காரணமாகவும், நீண்ட தொலைவு பயணம் செய்ய முடியாததாலும் இன்றைய விசாரணைக்கு தன்னால் நேரில் ஆஜராக இயலவில்லை என்று தெரிவித்து, தனது சட்டப்பிரிவு 6(1) மனுவில் தான் கோரிய தகவல்களை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்க கேட்டுக்கொண்டுள்ளார். இதனை இவ்வாணையம் பதிவு செய்கிறது.

**3.** ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், மேல்முறையீட்டாளர் சட்டப்பிரிவு 6(1) மனுவில் இனம் 3-இல் கோரியுள்ள அவரது 24.01.2024 தேதியிட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள கடலை மிட்டாய் கம்பெனி மற்றும் இரும்பு பட்டறை ஆகியவை மாநகராட்சியிடம் முன் அனுமதி பெறாமல் இருப்பின், அன்னர் மீது அரசு விதிகளின்படி மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு, பொதுத் தகவல் அலுவலரால் “தங்களது புகார் மனுவின் ஆக்கிரமிப்புகள் பொதுப் பணித் துறைக்கு சொந்தமான வாய்க்காலில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்து மதுரை தெற்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மனு செய்து உரிய பரிகாரம் பெற்றுக்கொள்ளுமாறு” மேல்முறையீட்டாளருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் அறியமுடிகிறது. எனவே, மதுரை தெற்கு வட்டாட்சியர் அவர்களையும் நீர்வள ஆதாரத் துறையையும் இவ்வழக்கு குறித்து விசாரணை செய்ய இவ்வாணையம் முடிவு செய்து, கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது:

1. **இவ்வழக்கின் விசாரணை 16.07.2026 அன்று முற்பகல் 11.00 மணிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**
2. **மேற்படி இவ்வழக்கின் மறுவிசாரணைக்கு மேல்முறையீட்டாளர் அவர்கள், பொதுத் தகவல் அலுவலர் / நிர்வாக அலுவலர், மண்டலம் - 4, மதுரை நகராட்சி, மதுரை மாவட்டம் அவர்கள், வட்டாட்சியர், மதுரை தெற்கு வட்டம் அவர்கள், பொதுத் தகவல் அலுவலர் / செயற்பொறியளாரின் நேர்முக உதவியாளர், நீர்வள ஆதாரத்துறை, பெரியார் வைகை வடிநில கோட்டம், மதுரை மாவட்டம் அவர்கள் ஆகிய நால்வரும் இவ்வழக்கு குறித்த உரிய ஆவணங்களுடன் 16.07.2026 அன்று முற்பகல் 11.00 மணிக்கு மதுரை ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவிருக்கும் இவ்வாணையத்தின் முகாம் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு உத்தரவிடப்படுகிறது.**

**ஓம்/-(அ. விஜயராம்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 6675/B/2024</u>**
**<u>பெறுநர்</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:</u>**
பொதுத் தகவல் அலுவலர் /
நிர்வாக அலுவலர்,
மண்டலம் - 4 (தெற்கு),
மதுரை மாநகராட்சி,
மதுரை மாவட்டம் - 625009.

**<u>நகல்</u>**
வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மதுரை தெற்கு வட்டம்,
மதுரை மாவட்டம் - 625001.

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியளாரின் நேர்முக உதவியாளர்,
நீர்வள ஆதாரத்துறை,
பெரியார் வைகை வடிநில கோட்டம்,
மதுரை மாவட்டம் - 625002.

**<u>மேல்முறையீட்டாளர்:</u>**
முனைவர்.சோ.செல்வம்,
4/566, டாக்டர் அம்பேத்கர் தெரு,
கணேஷ் நகர், முனிச்சாலை அஞ்சல்,
மதுரை மாவட்டம் - 625009.

Copy to : File
AK/PC